# மிருகத்தின் முத்திரை

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து, '**மிருகத்தின் முத்திரை**' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து**

# மிருகத்தின் முத்திரை

~~~~~~~~~~~~~~~~~~~~

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, '**மிருகத்தின் முத்திரை**' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)

~~~~~~~~~~~~~~~~~~~~

170. மிருகத்தின் முத்திரை வருவதற்கான வேளையானது சமீபித்து விட்டது. இதை நினைவு கூருங்கள். ஒன்று, நீங்கள் அதினுள் இருப்பீர்கள். அல்லது அதை விட்டு வெளியே இருப்பீர்கள். அது இரவில் திருடனைப் போல் வரும். அது அவ்வாறு திடீரென்று உங்கள் மேல் வந்து உங்களைக் பிடித்துக் கொள்ளும். முத்தி

ரையை தரித்துக்கொண்டவர்கள் ஒருவரும் அதைவிட்டு வெளியே வர முடியாது. வெளியே வாருங்கள். தன் முகம் மிகுந்த பிரகாசமுள்ளதாய் இருக்க, தூதனொருவன் வானத்திலிருந்து இறங்கி வந்து ஜனங் களை நோக்கி, பூமி அதிரத்தக்கதாய், "என் ஜனங்களே,... அவளுக்கு நேரிடும் வாதை களில் அகப்படாமலும் இருக்கும் படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்... அவள் விழுந்தாள்" என்று பலத்த சத்தமிட் டான். அவளைவிட்டு வெளியேறுங்கள், வெளியேறுங்கள். ஒரு தூதன் என்பது, ''ஒரு செய்தியாளன்'' என்பதாகும் என்று வார்த்தையில் சற்று முன்னர் நாம் வாசிக்க வில்லையா? அத்தூதன் இறங்கி வருகி றான். ''...அவளுடைய வாதைகளில் அகப் படாதபடிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்'' என்று பரிசுத்த ஆவியானவர் கூறுவதைக் கவனித்தீர்களா?

## 65-08-01M இப்பொல்லாத காலத்தின் தேவன்

~~~~~

102. இக்காலத்தில் வாழும் அந்த சபை, உலக ஏதேன் சாத்தானால் தோற்று விக்கப்பட்டது. உலக சபை மாநாட்டில் அவர்கள் ஒன்று இணைந்து ஒரே உலக சபையாக ஆகப்போகின்றனர். அவர்கள் யாவரும் ஒரு தலைவனின் கீழ் வருவார் கள். அப்பொழுது சாத்தான் சிங்காசனத்தில் அமருவான். முற்றிலும் சரியாக.

103. மணவாட்டி அதற்குள் நுழை வதைத்தடுக்க கடைசி அழைப்பு இப்பொ ழுது சென்று கொண்டிருக்கிறது. அவள் அதற்குள் நுழைந்துவிட்டால், மிருகத்தின் முத்திரையை அவள் தரித்து ஆக்கினை தீர்ப்படைவாள். அதனின்று அவள் ஒருபோதும் வெளியேற முடியாது. பாருங்கள்? ஆகையால் தான் நான், 'என் ஜனங்களே. அவர்களை விட்டு வெளியே
~~~~~

வாருங்கள்' என்று அவர்கள் நுழையு முன்பே அவர்களை எச்சரித்து வருகிறேன்.

## 65-08-29 சாத்தானின் ஏதேன்

~~~~~

206. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பா ராக. வார்த்தையானது உரைக்கப்பட்டா யிற்று; அது நிறைவேறியாக வேண்டும். அது நிறை வேறும். அருமையானவர்களே, யாரும் மரிக்க விரும்புவதில்லை. யாரும் அழிந்து போக விரும்புவதில்லை. உங்கள் ஸ்தாபனங்களுக்கு நீங்கள் எவ்வளவு உத்தமமாக இருந்தாலும் எனக்குக் கவலை யில்லை. அப்படி இருப்பது நல்லதுதான். உங்கள் பேரில் எனக்கு எவ்வித விரோத மும் கிடையாது. நீங்கள் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். ஆனால் உங்கள் பாரம்பரி யங்களைத் தூர எறிந்து விட்டு, கிறிஸ்துவை நோக்கிச் சென்று, அவருக்
~~~~~

குள் மறைந்து கொள்ளுங்கள். என்றாவது ஒரு நாளில் எக்காளம் தொனிக்கும். நீங்கள் எடுத்துக் கொள்ளப்படாவிடில் மிருகத்தின் முத்திரையை நீங்கள் அறியாமலேயே தரித்துக்கொள்ள நேரிடும். அப்பொழுது காலதாமதமாயிருக்கும்.

## 65-12-04 ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்

~ ~ ~ ~ ~

135. புதிய ஏற்பாட்டில் இரண்டேயிரண்டு சாராரைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது. ஒன்று தேவனுடைய பிள்ளைகள்; மற்றொன்று பிசாசின் பிள்ளைகளாகும். அதை நீங்கள் அறிவீர்களா? அதைக் குறித்ததான வேத வாக்கியத்தை நீங்கள் குறித்துக்கொள்ள விரும்புகிறீர்களா? அப்படியெனில், 1 யோவான் 3:10-ஐ குறித்துக் கொள்ளுங்கள்.

136. எபேசியருக்கு எழுதிய நிருபம் 2:2-ல் அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமலிருந்து ஏவாளைப் போல், ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்'' என்றழைக்கப்பட்டுள்ளனர். கீழ்ப்படிதலின் பிள்ளைகளுக்கும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்கும் பொதுவான அம்சம் ஏதுமில்லை. ஒரு கிறிஸ்தவ மத ஸ்தாபனத்தில் ஒருவர் கீழ்ப்படிந்தவராகவும், இன்னொருவர் கீழ்ப்படியாதவராகவும் இருக்கையில், மணவாட்டியால் எவ்வாறு அதில் அங்கமாயிருக்கவும், ஒத்துழைக்கவும் முடியும்? எவ்வாறு ஒருவர் வார்த்தையாகவும், இன்னொருவர் புரட்டப்பட்ட வார்த்தையாகவும் இருக்கமுடியும்? எவ்வாறு வேசியான ஒரு ஸ்திரீயும், சுத்தமான ஸ்திரீயும் மனம் ஒருமித்து நடந்து போக முடியும்? அவ்வாறு செய்ய அவர்களால் கூடாது. அவர்களுக்குள்

ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண் டிருக்க முடியாது. அவர்களை விட்டு வெளியே வாருங்கள். அது பிசாசினால் உண்டானதாயிருக்கிறது; அது மிருகத்தின் முத்திரையாயிருக்கிறது. சகல கிறிஸ்தவ மத ஸ்தாபனங்களும் மிருகத்தின் முத்தி ரையை நோக்கி நேராகப் போய்க்கொண் டிருக்கின்றன. அது யாருடையது என்ப தைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. தேவன், ஒரு மத ஸ்தாபனத்தையல்ல, தமது நாமத்திற்கென ஒரு ஜனங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு கிறிஸ் தவ மத ஸ்தாபனமானது இச்சத்தியங்களை ஏற்றுக் கொள்ளாது. ஆனால், தேவனைக் காண முடிந்து, அவருடைய வார்த்தையை நோக்கி அதை விசுவாசித்து, மதஸ்தாபனத் திற்காக ஜீவிக்காமல், தேவனுக்காக ஜீவிப் பதுமான ஒரு தனி மனிதனால் இச்சத்தி யங்களை ஏற்றுக்கொள்ள முடியும்; அவன்

தனது ஸ்தாபனத்திற்காகவோ, அல்லது ஏதோ ஒரு பேராயரின் (Bishop) பேரறிவுக் காகவோ, அல்லது அவர் போதித்தவை களுக்காகவோ ஜீவிக்கமாட்டான்.

**65-08-01M இப்பொல்லாத காலத்தின் தேவன்**

~~~~~

124. முழு உலகமும் மிருகத்தை வணங்கச் செய்வதற்காக, ஐக்கிய கிறிஸ்தவ மார்க்கத்தின் பெயரால், உலக சபைகளின் ஆலோசனை சங்கம் (World Council of Churches) என்ற ஒரு மகத்தான மதஸ்தாபன சபையை அவன் கட்டுவதற்கு திட்டமிடுகிறான். அதைக் கவனியுங்கள். அதைக் குறித்து வேதத்தில் நீங்கள் வாசிக்க விரும்புகிறீர்களா? வெளிப்படுத்தின விசேஷம் 13:6,8 அதுதான் நவீன பாபேல் கோபுரமாகும்.
~~~~~

125. எவ்வாறு, மாய்மாலக்காரனாகிய அந்த நிம்ரோது என்பவன் அந்தப் பெரிய கோபுரத்தைக் கட்டி, சிறிய நகரங்கள் அதற்கு கப்பங்கட்டும் படி செய்தான் என்பது உங்கள் நினைவில் உள்ள தல்லவா? பாபிள், பாபேல் (BABBLE AND BABEL) இரண்டும் ஒன்றேதான். (பாபிள் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "உளறுதல் என்று அர்த்தம் - தமிழாக்கியோன்) அதன் பெயர் நாளாக ஆக மாறிவிட்டது. இப்பொழுது பாபிலோனாக இருப்பது ரோமாபுரியாகும். முழு உலகமும் பாபிலோனிடத்திற்கு உலக சபைகளின் ஆலோசனை சங்கம் மூலம் கொண்டு வரப்படுகிறது. அந்த ஆலோசனை சங்கம், யாவரும் அவளைப் பணிந்து கொள்ளச் செய்துவிடும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று அறியாமலேயே மிருகத்தின் முத்தி ரையைத் தரித்துக்கொள்வீர்கள். ஆனால்

தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ வார்த்தைக்கு செவிகொடுத்து, அதைவிட்டு வெளியே வந்து விடுவார்கள்.

## 65-08-01M இப்பொல்லாத காலத்தின் தேவன்

~~~~~

இது எல்லாவிடங்களிலும் பரவி வருகின்றது. நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து வருகிறோம். சுவிசேஷத்திற்கு கொடுக்கப் பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அது பெறவேண்டிய உரிமையைப் பெற்றிருக்கவில்லை. அது அரசியலுடன் ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளது. ஒரு சங்கத்தை (Union) போல். முடிவில் அப்படித்தான் அது வரவேண்டும். ஏனெனில் மிருகத்தின் முத்திரை ஒரு இணைப்பின் மூலமாகவே வரவேண்டுமென்று நமக்குத் தெரியும். அது பகிஷ்காரம் செய்தல் (boycott) பெற்றுள்ளவர்
~~~~~

தவிர வேறு யாரும் கொள்ளவோ விற்கவோ முடியாது.

## 65-07-11 வெட்கப்படுதல்

~ ~ ~ ~ ~

ஒரு நிமிடம் கவனியுங்கள், கத்தோலிக்க சபையிலுள்ள கன்னியாஸ்திரீயாகி தனது கடைசி திரையை (Last veil) பெற அவள் தன்னை முழுவதுமாக சபைக்கு விற்றுப்போட வேண்டியவளாயிருக்கிறாள். அவளுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்துமே சபைக்கு உரிமையாகிவிடுகிறது. அவளுக்கு சுய சிந்தை எதுவுமில்லை. அவள் கடைசி திரையைப் பெற்றுவிட்டால், அவளுக்கு சுய சிந்தை இருக்க முடியாது. அவளுக்கு சுய சிந்தை கிடையாது, சுயசித்தம் கிடையாது. பாருங்கள், சாத்தான் ஒரு போலியை இங்கு ஏற்படுத்தி விட்டான்... உண்மையான கிறிஸ்துவின் சபை (மணவாட்டி)

அவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள அவருடைய வார்த்தைக்கும் தன்னை முழுவதுமாக விற்றுப் போடுவதனால், கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கிறது. என்ன ஒரு வித்தியாசம்!

இன்றைய நவீன சபையை நவீன உலகப்பிரகாரமான சபையை நாம் காண்கிறோம். நவீன உலகப் பிரகாரமான சபை ஆவிக்குரிய சபை இவ்விரண்டும். கர்ப்பந்தரித்து குமாரர்களைப் பிறப்பிக்க வேண்டும். அவைகளில் ஒன்று- ஸ்தாபன சபை - இந்நாட்களில் ஒன்றில் உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தில் பிரசவிக்கும். அது உலகத்திற்கு ஸ்தாபன சபைகளின் மூலம் அந்திக் கிறிஸ்துவை அளிக்கும். அது முற்றிலும் உண்மை. அதைக் காண ஒருக்கால் நான் உயிரோடு இருக்கமாட்டேன். நான் உயிரோடு இருப்பேன் என்று

நம்புகிறேன். ஆனால் வாலிபராகிய நீங்கள், ஒரு ஊழியக்காரர் இவ்வாறு கூறினதைக் கேட்டீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது கடைசியாக மிருகத்தின் முத்திரையில் முடிவு பெறும். அவள் உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தை உருவாக்கும் போது, அவளுடைய மகனை - அந்திக் கிறிஸ்துவை - பெற்றெடுப்பாள்.

## 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

~~~~~

73. இதை வாசிப்பவர்களும் தொலை பேசியின் மூலம் கேட்பவர்களும் என்னை ஒரு மார்க்க வெறி கொண்டவன் என்று எண்ண வேண்டாம். அவ்விதமாக நான் இருக்கிறேன் என்று நான் நினைக்க வில்லை. ஆனால் என்னிடம் கொடுக்கப் பட்ட செய்திக்கு நான் உத்திரவாதமுள்ள
~~~~~

வனாயிருக்க வேண்டும். அதற்கு நான் பக்தியுள்ளவனாக நடக்கவேண்டும். இல்லையெனில் நான் ஒரு மாய்மாலக் காரனாக காணப்படுவேன். நான் எதைச் சொல்ல அனுப்பப்பட்டேனோ அதையே யன்றி வேறெதையும் கூறமுடியாது. இன்றுள்ள கிறிஸ்தவ சமுதாயத் திற்கு ஏற்பட்டுள்ள பெரிய சத்துரு, ஸ்தாபிக்கப் பட்ட சபைகள்தாம் என்று நான் நினைக்கி றேன். முடிவில் அது சபைகளின் ஐக்கிய ஆலோசனை சங்கம் என்று அதை என்னால் வேதரீதியாக தேவனுடைய ஒத்தாசையைக் கொண்டு நிரூபிக்க முடியும். மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளும் என்று என் முழு இருதயத்தோடும் விசுவாசிக் கிறேன். ஏனெனில் தேவன் ஒருபோதும் எந்த காலத்திலும் ஒரு ஸ்தாபிக்கப்பட்ட சபையை அங்கிகரித்ததில்லை. ஒவ்வொரு

சமயமும் ஒரு மனிதன் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தும்போது, பரிசுத்தாவியானவர் சபையை விட்டு விலகுகிறார். அதன்பின் ஒருபோதும் அதில் திரும்புவதில்லை. எந்த சரித்திரக்காரரையாவது கேட்டுப் பாருங் கள்; அல்லது நீங்களே ஆராய்ந்து பாருங்கள். இப்படி ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் அங்கத்தினர்களால் வளர்ந்து பெருகினாலும் தேவ ஆவியினால் ஒரு போதும் உயிர்ப்பிக்கப்படுகிறதில்லை.

**65-04-18Eதேவன் தமது வார்த்தையைப் பற்றின் சிந்தையை எப்பொழுதாவது மாற்றுவாரா?**

~ ~ ~ ~ ~

56. சிந்தித்துப் பாருங்கள் மேசியா அவர்கள் முன் நின்று, தம்மை வெளிப் படுத்தினது எத்தனை வல்லமையாக இருந்திருக்கும் அவரை அவர்கள் ஏன் கண்டு கொள்ளவில்லை? அவரை அவர்க ளுடைய வழிகாட்டிகள் விளங்கிக் கொண்

டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் விளங்கிக் கொள்ளாத காரணம் அவரைக் குறித்து எழுதப்பட்ட வேத வாக்கியத்தை நம்பாமற்போனதே. இக்காரணத்தினால் தான் அவர்கள் அவரை அவமதித்து, "இவன் முதலாவது - முறை தவறி பிறந்தவன்" என்றார்கள். இந்த மனித விளக்கத்தை நாம் நம்ப மாட்டோம். எத்தனை ஆண்டுகள் புரண்டாலும், நாம் இத்தகைய விளக்கத்தை நம்பவே மாட் டோம். நம்மைக் கொல்லும் உபத்திரவம் வந்தாலும் அவர் கன்னிகைக்குப் பிறந்தார் என்பதை மறுதலிக்க மாட்டோம் இதுவும் நிறைவேறும். மிருகத்தின் முத்திரை மனிதர் மேல் அடிக்கப்படும் காலத்தில் அந்த நாள் தூரமில்லை (வெளி : 3:6) இது போல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுமதிக்க மாட்டார்கள். இந்நாட்களிலே யேகோவா செய்யும் கிரியைகளுக்குச்

சாட்சியாக பலர் உயிரையும் இழந்து இரத்த சாட்சியாவார்கள். இப்பொழுது கொடுக்கப்படும் வெளிப்பாட்டைப் பெற மனிதர் உயிரைக் கொடுத்தும் பெற மாட்டார்கள்

57. பெரிய சபைகள் ஐக்கியப்படும் போது, (இப்பொழுதே உலக சபைகள் கூடுகின்றன). உங்களுடைய வாழ்க்கை யின் சாட்சியை முத்திரிக்க வேண்டியதா கும். விசுவாசிக்க உங்களுக்கு ஓர் தருண மிது. அவரை ஆக்கினைக்குள்ளாக்கின. ஆயக்காரர் உயிர்த்தெழுந்து வந்தால், அவர் மேல் குற்றம் சாட்ட அவர்களுக்கு இடமிருக்காது.

58. ஆனால் நீங்கள், "நான் அக்காலத் திலே இருந்திருந்தால், இன்னின்ன மாதிரி செய்திருப்பேன்" என்கிறீர்கள்.

59. அது உங்களுடையக் காலமா யிருக்கவில்லை. ஆனால் இது உங்களு டையக் காலம் இது உங்களுடைய சமயம்.

**65-02-19 இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று**

~~~~~

82. இப்பொழுது என்ன நடக்கப் போகிறது? இந்த சபைகள் அனைத்தும் உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தில் ஒன்று சேரும் போது, அதற்கு தலைமை வகிக்கப் போகிறவர் யாரென்று உங்களால் காண முடியவில்லையா? மெதோடிஸ்டு கள், பிரஸ்பிடேரியன்களாகிய நீங்களும், மற்ற வர்களும், பெந்தெகொஸ்தேயினரும் கூட இதை காண முடியவில்லையா? நீங்கள் அதில் சேரப் போவதில்லையென்று கூறுகின்றீர்கள். நீங்கள் அதில் சேர வேண்டும், இல்லையென்றால் உங்கள் ஸ்தாபனத்தை கலைத்து விட வேண்டும்.
~~~~~

இதில் ஏதாவதொன்றை செய்ய வேண்டும். இது உங்கள் முன்னால் வைக்கப்பட்டுள் ளது. நீங்கள் அதை செய்தே ஆக வேண்டும் . அது மிருகத்தின் முத்திரையை உங்கள் மேல் கட்டாயமாகப் போடுவதா கும். அதுதான் அது. ஸ்தாபன முறைமை மிருகத்தின் முத்திரையென்று நான் வேதத்திலிருந்து உங்களுக்கு நிரூபிக்க முடியும். அவள் ஒரு வேசி. அவளுக்கு வேசி குமாரத்திகள் இருந்தனர். அது உண்மையென்று நமக்குத் தெரியும். ஸ்தாபன மார்க்கம் வார்த்தைக்கு முரணா னது. அதன் கொள்கைகளில் அது அந்திக் கிறிஸ்து. அதிலுள்ள எல்லாமே அந்திக் கிறிஸ்துவல்ல, அதன் கொள்கைகளில், அதன் முறைமையில் அது அந்திக் கிறிஸ்து. ஏனெனில் அது தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாயுள்ளது. ஸ்தாபன முறைமை ஒவ்வொன்றும் அவ்வாறுள்ளது.

## 65-01-20 உன் சுயபுத்தியின் மேல் சாயாதே

~~~~~

77. இதை நீங்கள் குறித்து வைத்துக கொள்ளுங்கள். இது ஒலிநாடாவிலும் பதிவு செய்யப்படுகிறது. இதை நிலை வில் கொள்ளுங்கள். நீங்கள் ஆராதிப்பதாகக் கூறும் அதே தேவன் .... அறுவடையின் போது உலக சபை மாநாட்டில் ஒன்று சேரும் இந்த ஜனங்கள்! நீங்கள் அதற்குள் செல்ல வேண்டும், அதற்கு வெளியே நீங்கள் இருக்க முடியாது. நீங்கள் தனிப் பட்ட நபராக அதை விட்டு வெளியே வா வேண்டும். இல்லையேல், அதற்குள் நீங்கள் செல்லவேண் டும். இதற்கு நடுவாக வேறெதுமில்லை. அது மிருகத்தின் முத்திரையாயிருக்கும். அந்த முத்திரையை அல்லது முரண்பாட்டை பெறாமல், எந்த மனிதனும் கொள்ளவும் விற்கவும் முடியாது. அதனின்று விலகியிருங்கள்!
~~~~~

அதை விட்டி வெளியே வாருங்கள்! அதை விட்டு ஓடிப் போங்கள்! அதை அதை விட்டு விலகுங்கள்! அவர்கள் ஆராதிப்ப தாக உரிமை கோரும் அந்த தேவனே அவர்களை அழித்துப் போடுவார்.

**65-01-18 முரண்பாட்டின் விதை**

~~~~~

மெதோடிஸ்டுகளும் பாப்டிஸ்டுகளும் அவர்களுடைய ஸ்தாபனத்தின் காரணமாக ஒன்றாக இணைய முடியவில்லை. ஆனால் ''நாமெல்லோரும் ஒன்று கூடி மிகப்பெரிய ஸ்தாபனம் ஒன்றை உண்டாக்குவோம்'' என்றால் அதற்கு சரி என்று ஆமோதம் தெரிவிக்கின்றனர். நீங்கள், “ஓ, பெந்தெ கொஸ்தேகாரர் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனலாம். ஏற்றுக் கொள்ள மாட்டார்களா? அன்றொரு நாள் அவர்கள் மிஸ்ஸௌரியில் என்ன செய்தனர்? நீங்கள் செய்தித்தாளை நிச்சயமாகப் படிக்கிறீர்கள்.
~~~~~

பாருங்கள்? நீங்கள் மாட்டீர்களா? இல்லை, பெந்தெகொஸ்தேகாரராகிய நீங்கள் அல்ல, ஜனங்கள் அல்ல. அது நீங்கள் அல்ல. அங்குள்ள அரசாங்கம் உங்களைத் தூண்டுகிறது. அந்த தலைவர் உங்களைத் திசை திருப்புகிறார். அது உண்மை. அதனுடன் செல்லாதீர்கள். அதிலிருந்து விலகி நில்லுங்கள், அது மிருகத்தின் முத்திரை. உங்களால் முடியும் வரைக்கும் வேகமாக அதிலிருந்து விடுபடுங்கள். பாருங்கள்? அது மதசம்பந்த... அந்த அரசாங்கத் தலைவரின் தூண்டுதல் அது.

**64-12-27 இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?**

~~~~~

இரண்டு முறைமைகள். ஒன்று சரியான முறைமை, மற்றது சீர்குலைந்த முறைமை. ஒன்று தேவனுடைய வார்த்தை, அது சரியானது. ஒவ்வொரு மனிதனின் வார்த்
~~~~~

தையும் பொய். இன்று நாம் பெற்றுள்ள ஸ்தாபன முறைமை, ஸ்தாபனங்களை ஒன்று சேர்த்து உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தை நிறுவி, மிருகத்தின் முத்திரையை உண்டாக்குவதென்பது தவறான காரியம். மனிதர் குருட்டுத்தனமாக அதற்குள் செல்கின்றனர்.

அவர்களை அதிலிருந்து விடுவிக்க தேவன் பூமியில் ஒன்றை வைத்திருக்கிறார். ஆனால் அவர்களோ அது மூடபக்தி வைராக்கியம் என்று எண்ணுகின்றனர். அவர்களுக்கு அது வேண்டாம். அவர்கள் அதைப் புறக்கணிக்கின்றனர். அவர்கள் அதைக் குறித்து ஏதாவதொன்று செய்ய வேண்டுமென்று நினைக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்த முறைமையை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்று எண்ணுகின்றனர். தேவன் ஏற்கனவே அவருடைய வார்த்தை என்னும் முறைமையை இங்கு

வைத்திருக்கிறார். நமக்கோ அது வேண்டாம். எனவே அவர்கள் அன்றிருந்த நிலையிலே இன்று நாமிருப்பதைக் காண்கிறோம்.

## 64-12-27 இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?

~~~~~

260 இப்பொழுது, பெந்தெகொஸ்தேயினரே, உலக சபைகளின் ஆலோசனை சங்கத்திலிருந்து விலகியிருங்கள். இப்பொழுது, இங்குள்ள ஊழியர்களே நீங்கள், நீங்கள் இந்த ஜனங்களுக்கு தலைமை அலுவலகத்தில் எழுதுங்கள். நீங்கள் அசெம்பிளீஸ் ஸ்தாபனத்துக்கு எழுத வேண்டிய அவசியமிராது. ஏனெனில் அவர்கள் அதனுடன் எந்த தொடர்பும் கொள்ளக் கூடாது என்று தீர்மானம் செய்து விட்டனர். பாப்டிஸ்டு சகோதரர்களே, நீங்களும் அதிலிருந்து விலகியிருங்கள். அது வந்து கொண்டிருக்கும் மிருகத்தின்
~~~~~

முத்திரை என்று உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? நீங்கள் வேத வாக்கியங்களை குறித்து அறிந்திருப்பீர்க ளானால், அதை விழுங்கப்போவது யாரென்று உங்களுக்கு தெரிந்திருக்கும். வார்த்தை உங்களில் பிரதிபலிக்குமானால் அந்த காரியத்திலிருந்து விலகியிருங்கள். உங்கள் ஸ்தாபானம் அதற்குள்ளாக விரைந்து ஓடும். நீங்களும் அதில் சேரா விட்டால் உங்கள் ஸ்தாபனம் உங்களை சபையிலிருந்து தள்ளிவிடும். நீங்கள் ஸ்தாபனத்தில் இருந்து கொண்டு அதில் சேராமல் இருக்க முடியாது. நீங்கள் அதில் சேர வேண்டும். இல்லாவிடில் உங்கள் ஸ்தாபனத்தை விட்டு வெளிவரவேண்டும்.

261 அப்பொழுது நீங்கள் ஸ்தாப னத்தை சேர்ந்திருக்கவில்லை என்பதை காண்பிக்கிறீர்கள். முற்றிலுமாக. நீங்கள் அப்படி செய்வீர்களானால், தேவன் உங்

களை ஆசீர்வதிப்பார். எத்தனைபேர் அப்படி செய்வார்கள் என்று கூற முடியாது. ஆனால் சிலர் அப்படி செய்வார்கள், சந்தேகமேயில்லை. ஆம் ஐயா.

## 64-12-12 அறுப்பின் நேரம்

~~~~~

83 சபையானது தன் நேரத்தை உணர்ந்துகொள்ளவில்லை. இஸ்ரவேலர் எவ்வாறு கட்டாயத்தினால் பாலஸ்தீனாவுக்குள் அனுப்பப்பட்டார்களோ, அவ்வாறே ஸ்தாபனங்களும் உலக சபை ஆலோசனை சங்கத்தினுள் கட்டாயமாக நுழைக்கப்படும். ஏன்? ஏனெனில் அவர்களின் நேரத்தை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவங்களுக்கு உடன்பட வேண்டாம்.
~~~~~

84 உங்கள் ஜீவன் தப்ப ஓடிப்போங்கள். இல்லையேல் அதில் சிக்கி மிருகத்தின் முத்திரையைத் தரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்பொழுது காலதாமதமாகியிருக்கும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். அந்நாளிலே தலைமயிர் கத்தரித்துக் கொண்ட பெண்களாகிய நீங்கள் அது போன்றே இருப்பீர்கள். நான் வெளிப்படையாய் கூறுவது உங்களுக்கு கடினமாயிருக்கும். ஆனால் வேதம் அவ்வாறே கூறுகின்றது. மயிரைக் கத்தரித்துக் கொண்ட எந்தப் பெண்ணும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள் என்று வேதம் உரைக்கின்றது. கணவன் தான் அவள் தலை, கணவனுக்குத் தலை கிறிஸ்து. எனவே மயிரைக்கத்தரிப்பதன் மூலம் அவள் கிறிஸ்துவைக் கனவீனப்

படுத்துகின்றாள் அவள் கனவீனமாய் இருந்து கொண்டு, எவ்விதம் அசுத்த மில்லாமல் இருக்கமுடியும்? அந்தநாளில் மயிரைக் கத்தரித்துள்ள பெண் அவ்வாறே இருக்கட்டும். அவள் அரை கால் சட்டை அணிந்திருப்பாளானால், அதை தொடர்ந்து அணியட்டும். நீ வார்த்தையை மறுதலிக்கிறவனாயிருந்தால், அதை தொடர்ந்து மறுதலித்துக் கொண்டே இருப் பாய். ஆனால் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். தேவனுடைய நீதியுள்ள வார்த்தையென்பது, வெளிப்படுத்தப்பட்ட தேவனாகும்.

## 64-07-26M காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்

~ ~ ~ ~ ~

218 கவனியுங்கள், புறஜாதிகளி லிருந்து மணவாட்டியை அழைக்க அவர்

அதையே செய்வதாக மல்கியா 4ல் வாக்களித்துள்ளார். அவர் ஏழாம் சபையின் காலத்தில் சபைக்கு வெளியே தள்ளப்படுவார் என்று வேதம் கூறுகிறது. அவர் சபைக்கு வெளியே தள்ளப்படுவார்; அது முழுவதும் அந்த காரமாகும்... அது எங்கு அந்தகாரப்படும்? அது மார்க்க சம்பந்தமானதற்குள் நுழைந்து, உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தில் பிரவேசிக்கும். அவள்... அவர் முழுவதுமாக வெளியே தள்ளப்பட்டு விட்டார் - அவருடைய வார்த்தை. அவர்கள் அவருடைய வார்த்தையுடன் இணங்க மாட்டார்கள். அவர்களால் இணங்க முடியாதென்று உங்களுக்குத் தெரியும். அவர்களுடைய சிறு குழுக்களிலேயே அவர்களால் இணங்க முடியவில்லை என்னும்போது, அவர்கள் எவ்வாறு அதில் இணங்கப்போகிறார்கள்? எனவே அவர்கள் வேறொரு மிருகத்தின்

முத்திரையைத் தரித்துக் கொள்கின்றனர்- மிருகத்துக்கு ஒரு சொரூபம்.

219 மிருகத்துக்கு ஒரு சொரூபம் உண்டாக்கப்பட்டதாக வேதம் கூறுகிறது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எண் எப்பொழுதுமே பதின்மூன்றாக இருந்து வந்துள்ளது. அது பதின்மூன்று நாடுகளுடன் தொடங்கினது. பதின் மூன்று குடியிருப்புகள், பதின்மூன்று நட்சத்திரங்கள், பதின்மூன்று கோடுகள்; பதின்மூன்று என்னும் எண் எப்பொழுதுமே ஒரு ஸ்திரீ. அவள் வெளிப்படுத்தல் பதின்மூன்றாம் அதிகாரத்தில் தோன்றுகிறாள். அது முதலில் ஆட்டுக்குட்டியாக இருந்தது. சாந்தகுணம், பேச்சுரிமை, வழிபாட்டின் உரிமை போன்றவை. அதன் பிறகு அது வல்லமையைப்பெற்று, அதற்கு முன்பிருந்து வலுசர்ப்பத்தின் வல்லமையுடன் பேசினது. அது என்ன? அந்த வலு

சர்ப்பம் என்ன? ரோமாபுரி. பாருங்கள், அது மிருகத்தின் சொரூபமாக முத்திரையைப் பெற்று உண்மையான தேவனுடைய சபைக்கு எதிராக எழும்பினது.

**64-07-19M எக்காளப் பண்டிகை**

~~~~~

120. அவர் சரியாக இப்பொழுதும் அந்த அதே காரியத்தைத் தான் செய்துக் கொண்டிருக்கிறார்! வேதாகமத்தை விசுவாசிப்பவர்களே, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவருடைய வருகைக்கு முன்னர் சரியாக இங்கே என்ன நடக்க வேண்டியுள்ளது?

121. உலகம் எந்தவிதமான ஒரு நிலையில் உள்ளது என்று பாருங்கள்; இப்பொழுது உலகம் அவ்விதம் தான் உள்ளது. சபையைப் பாருங்கள், அது எங்கே உள்ளது என்று பாருங்கள்.
~~~~~

"லவோதிக்கேயா விழுந்துக்கொண்டிருக்கின்றது, அனலுமின்றி குளிருமின்றி இருக்கின்றது. வார்த்தையை வெளியேத் தள்ளி விட்டது. அந்த முழுக்காரியமும் அந்தப் பெரிய சபைகளின் ஆலோசனைச் சங்கத்திற்குள்ளாக, அந்த உலக சபைகளின் ஆலோசனைச் சங்கத்திற்குள்ளாகச் சென்று மிருகத்தின் முத்திரையை உருவாக்குகின்றன; அது தவறானது என்று வேதாகமம் அறிவிக்கின்றது. மற்றும் அந்த எல்லாக் காரியங்களும், ஆனாலும் இன்னுமாக பிராடெஸ்டெண்ட் ஸ்தாபனத்தாரும் கண்மூடித்தனமாக, வேதாகமத்தை அறியாமல் நேராக அதற்குள்ளாகச் சென்றுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய பாரம்பரியம்! ஓ, அவர்களுக்கு ஒரு - ஒரு - ஒரு சூப்பர்மேன், அசாதாரணமான வல்லமை வலிமை படைத்த மனிதன் வேண்டும். அவ்வளவு தான், ஆம்

அவர்கள் ஒருவனைப் பெற்றுக்கொள்ளப் போகின்றனர். அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று உறுதி யுடன் செயல்படுவர்.

## 64-06-18 தேவனுடைய பிரசன்னம் அடையாளம் கண்டுகொள்ளப்படாமலிருத்தல்

~~~~~

இயேசு கிறிஸ்துவானவர் தோன்றும் வரையில் கிறிஸ்தவ சபை பார்க்கிற அற்புத அடையாளங்களில் இதுவே கடைசியானதாய் இருக்கிறது. தேவன் உங்களுக்கு முன்பாக இதைச் சொல்ல அனுமதிப்பாரானால், கர்த்தருடைய நாமத்தில் நான் சொல்வதை விசுவாசியுங் கள். வேதத்தில் சொல்லப்பட்டவைகளை யெல்லாம் பார்க்கும்போது மிருகத்தின் முத்திரையை தவிர வேறொன்றும் விட்டு வைக்கப்படவில்லை. ஆகவே தேவ
~~~~~

னுடைய முத்திரையை பெற்றுக் கொள்ளுங்கள்.

## 64-06-17 எல்லா காலங்களிலும் அடையாளம் கண்டுகொள்ளபட்ட கிறிஸ்து

~ ~ ~ ~ ~

மக்களை எச்சரிக்காமல் காரியங்கள் இந்த விதமான நிலையை அடைய விட்டு விட்ட இந்த பிரசங்கிகளின் கதி என்ன? தேவன் அவர்களிடம் கணக்கு கேட்பார். சரியாக இந்த சிக்கலின் நேரத்தில், அவர்கள் சிக்கலில் இருக்கின்றனர்; அவர்கள்தான். கம்யூனிசம் வருவதில்லை; அந்த முழு கூட்டத்தையும் உலக சபை ஐக்கியங்களின் சங்கம்தான் விழுங்கப் போகிறது. ஆகவே நினைவில் கொள்ளுங் கள், நீங்கள் ''நல்லது, அது நடக்கும் போது...“ என்று கூறுவீர்களானால், அது மிகவும் காலதாமதமாகிவிட்டது; நீங்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்று

விட்டிருப்பீர்கள். பிறகு நீங்கள் அதைச் சேர்ந்தவர்களாகி விடுகிறீர்கள். அதிலிருந்து இப்பொழுது உங்களால்... உங்களால் எங்கே செல்ல முடியுமோ அங்கே சென்றுவிடுங்கள் (ஆம், ஐயா)

தேவனுடைய இராஜ்ஜியத்தில் முத்தரிக்கப்படுங்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய காணக்கூடாத கிறிஸ்துவின் சரீரத்தில், அதற்குள் சேருவதல்ல, அதற்குள் உரையாடிச் செல்வதல்ல, அதற்குள் அந்நிய பாஷைகளில் பேசிச் செல்வதல்ல, அதற்குள் சத்தமிட்டு செல்லுவதல்ல; அது அதற்குள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதாகும். நீங்கள் அதினுள் பரிசுத்த ஆவியினால் பிறக்கின்றீர்கள். அது சரி. நிச்சயமாக.

## 64-03-07 கடல் பயணத்தில் சாட்சி

~ ~ ~ ~ ~

ஆகவே கம்யூனிசம், கம்யூனிசம் வந்து விட்டது “என்ன நடக்கப் போகின்றது?'' என்று மிகவும் பயந்து போய் இருக்கி றோம்? ஆனால், உங்களுக்குத் தெரியுமா, அந்தப் பெரிய காரியம் கம்யூனிசம் அல்ல. அதை நான் உங்களுக்கு கூறுவேனாக; நான் கம்யூனிசத்தைப் பார்த்து பயப்படுவ தில்லை.

ஆனால் பெந்தெகொஸ்தேயினராகிய உங்களை, இந்த உலக சபை ஐக்கியங் களில் சங்கம் எடுத்துக் கொள்ளப் போகின் றதே, அதைப் பற்றிதான் நான் பயப்படுகி றேன். அதுதான் காரியமாகும். அது மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளப் போகின்றது, நீங்களும் அதற் குள் செல்லத்தான் போகிறீர்கள். ஏனென் றால் நீங்கள் ஒரு ஸ்தாபனமாயிருக்கின் றீர்கள், நீங்கள் உள்ளே செல்லவேண்டும் அல்லது வெளியே செல்லவேண்டும்.

அதுதான் காரியம். ஆகவே எந்த ஒரு புத்தியுள்ள, ஆவிக்குரிய நபரும் அதை அறிந்திருக்கிறான். இன்னுமொரு கடலின் மேலான சாட்சி நமக்கு தேவையாயிருக் கிறது.

ஆகவே நாம் இப்பொழுது பார்க்கி றோம். ஆகவே நம்முடைய பெந்தெ கொஸ்தேயினரும், தூண்டில் முள், தூண் டில் கயிறு மற்றும் தூண்டில் பளுவை விழுங்கிக் கொண்டு "அது என்ன ஒரு மகத்தான காரியமாக இருக்கப்போகின் றது," என்கின்றனர். மெத்தோடிஸ்டு, பிரஸ்பிடேரியன், லூத்தரன், கிறிஸ்துவின் மற்றும் பெந்தெகொஸ்தேயினரும், நீங்க ளும் அங்கே அதினுள் இருக்க வேண்டு மென்றால், உங்களுடைய மகத்தான அப்போஸ்தல உபதேசத்தை மறுதலித்து - மறுதலித்து ஆக வேண்டும். அவர்கள் அதையேதான் செய்ய வேண்டும். அதி

னுள் செய்ய ஒன்றுமே உங்களுக்கு கிடையாது. சரியாக நிருபிக்கப்பட்ட விதத்தில் அவை எல்லாம் ரோமாபுரியுடன் சேர்ந்து கொண்டிருக்கின்றன. வேதாகமம் அவ்வாறு கூறியிருக்கின்றது.

**64-03-07 கடல் பயணத்தில் சாட்சி**

~ ~ ~ ~ ~

இங்கு ஒரு காரியத்தைக் கூற விரும்புகிறேன். இது ஒரு போதகமல்ல. நான் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறேன். என்ன நிகழ்ந்துள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? அது சீக்கிரமாக நிகழப்போகின்றது. என்னுடைய வார்த்தையை குறித்து வையுங்கள், எல்லா ஸ்தாபனங்களும் அந்த உலக சபைகளின் ஐக்கியத்தில் (Ecumenical Council) சேரப் போகின்றன. இல்லையெனில் அவர்களுடைய உதவி கிடைக்காது.

ஆதலால், புறக்கணிக்கப்படுதல் இருக்கும், பிறகு யாரும் இச்சபைகளுக்கோ அல்லது மற்ற சபைகளுக்கோ செல்ல முடியாது. உன்னுடைய சபையிலிருந்து ஒரு முத்திரையைப் பெற்றாலொழிய நீ வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது. மிருகத்தின் முத்திரை - அது ஏற்கனவே இருந்தது, அது மறுபடியும் வரப் போகின்றது என்பதை நீங்கள் கவனியுங்கள். சபையிலுள்ள ஆவிக்குரிய மக்கள் அதை அறிந்து கொள்வர். பெந்தெகோஸ்தே மக்களாகிய நீங்கள் எப்படியாயினும், இதை அடையாளங்கண்டு, உணர ஆரம்பிக்கிறீர்கள். (பெந்தெகோஸ்தே ஸ்தாபனங்களைச் சேர்ந்த அநேக சபைகள், உங்கள் சபைகள் மாத்திரம்); நான் உங்கள் பெயர்களைக் கூறத் தேவையில்லை. ஆனால் அவைகள் இந்த சமயத்தில் அதற்குள் வந்து கொண்டிருக்கின்றன

என்பதை நீங்கள் அறிவீர்கள். தாங்கள் அவ்வாறுதான் என்று இன்னும் சாட்சி கொடுக்கவில்லை.

பிறகு நீ அவ்வாறு செய்வாயானால், நீ என்ன செய்ய வேண்டும்? பரிசுத்த ஆவி யின் அபிஷேகமாகிய சுவிசேஷ போதகத்தை, வேத போதனையை நீ இழக்க அல்லது விட்டுக் கொடுக்க வேண்டும் அந்த உறுப்பினர்கள் அதற்காக நிற்க போவதில்லை. உண்மையான மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் முதலாவதாக மரிப் பார்கள். அவர்கள் வார்த்தையினால் பிறந்தவர்கள். இந்தக் காரியம் வரப் போகின்றதென்று அவர்கள் அறிவார்கள். ஆம், ஐயா.

**64-02-13 அதன்பின் இயேசு வந்து அழைத்தார்**

~ ~ ~ ~ ~

41 தேவகுமாரன் வெளிப்படும் கால மாகிய இந்த காலத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். என்று நான் "விசுவா சிக்கிறேன். எந்த சமயத்திலும் அவர் தோன்றலாம் என்ற மணி நேரத்தில் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்த உலகத்தின் சரித்திரமானது முடிவடையும் கடைசி மணி நேரத்தில் நாமிருக்கிறோம் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. இதற்கேற்ப காரியங்கள் உருவாகுவதை என்னால் காணமுடிகிறது. உலக ஐக்கிய ஆலோ சனை சங்கமானது (World Council of Churches) சபைகள் எல்லாம் மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்ள வழி நடத்திக் கொண்டிருக்கின்றது. ரோம மார்க்கம் என்ன செய்து கொண்டிருக் கிறதென்பதை பாருங்கள். இவர்களெல் லாம் ஒன்று சேர்ந்து சுவிசேஷ கதவுகளை

அடைத்துக் கொண்டும். எல்லோரையும் அவர்கள் காட்டும் வெளிச்சத்தில் நடக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் வேறொன்றும் செய்யக்கூடாத கட்டடத்தில் கொண்டு - வந்து நிறுத்திக்கொண்டிருப் பதை பாருங்கள். தேவனுடைய வார்த் தையைச் சார்ந்து அதை விசுவாசிப்பதைத் தவிர வேறொன்றும் நமக்கில்லை. ஏனென் றால் தேவனுடைய வார்த்தை மட்டுமே என்றைக்கும் சரியானதாகும்.

42. எந்த சபையின் காலத்திலும் தேவன் சபைக்கு வெளியே இல்லை. ஆனால் லவோதிக்கேயா சபையின் கால மாகிய இந்தக் காலத்தில் தான் கிறுஸ்து வானவர் வெளியே விடப்பட்டு அங்கி ருந்து கதவை தட்டுகிறவராக காணப்படு கிறார் வெளி: 3:20). என்ன நடந்தது? இந்த உலக ஐக்கிய சபை அவரை வெளியே தள்ளிவிட்டது. வேதம் அவர்

வெளியே தள்ளப்பட்டிருப்பார் என்று கூறுகிறதா! அவர் அவ்வண்ணமேயுள்ளார். ஐக்கிய சபை எதற்காக தன் கதவுகளை அடைத்துக் கொள்கிறது? தேவனுடைய வார்த்தைக்காகவே! கிறிஸ்துவே வார்த்தை யாயிருக்கிறார். அவர் என்றென்றைக்கும் வார்த்தையாகவே இருக்கிறார். இன்றும் கூட!

## 64-02-05 தேவனே தமது வார்த்தையின் வியாக்கியானி

~ ~ ~ ~ ~

78. இப்பொழுது அது என்ன? நாம் அறுபது வருடங்களை கடந்துள்ளோம். பெந்தேகோஸ்துக்களே, "நாங்கள் இது, நாங்கள் அது" என்று ஸ்தாபனமாக்கிக் கொண்டனர். தேவன் அதிலிருந்து தூர மாய் விலகி விட்டார். அதற்கு அப்பால் அந்தக் கூட்டத்திலிருந்து தெரிந்து கொள் ளப்பட்ட ஒரு மணவாட்டியைக் கொண்டு

வருகிறார். இன்னொரு சபைக் காலம் இருக்கப்போவதில்லை. பிலதெல்பியா சபையின் காலத்தில் வெஸ்லி இருந்தார். லவோதிக்கேயா சபையின் காலத்தில் பெந்தேகோஸ்தே ஸ்தாபனம் இருக்கிறது. அவை யாவும் நேராக மிருகத்தின் முத்திரைக்குள்ளாகச் செல்லுகின்றன. ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு இந்த சகோ தரன் கூறிக் கொண்டிருந்தது போல அது வேதமாய் உள்ளது. அது உண்மை. சரி. அவர்கள் யாவரும் அந்த ஸ்தாபனங்களில் உள்ளனர். ஏனென்றால் அவர்கள் அடுத்து வரும் வெளிச்சத்தில் நடக்க மறுத்தனர். அவர்கள் தங்களையே ஸ்தாபனமாக்கிக் கொண்டு, "நாங்கள் இதை விசுவாசிக்கி றோம்'' என்று கூறுகிறார்கள். தேவன் ஒன்றைச் செய்கிற போது, அதை வேத வாக்கியத்தோடு ஆராய்ந்து பாருங்கள்.

**64-01-25 வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்**

~~~~~

51. நான் இதை பயபக்தியோடும், மரியாதையோடும், வெளிச்சத்தைக் கொண்டுவரும்படியாய் கூறுவேனாக. ஏனென்றால் கொஞ்ச நேரத்திற்கு முன்னர் நம்முடைய சகோதரன் கூறினது போல, நாம் ஜீவிப்பதாக நீங்கள் நினைப்பதைக் காட்டிலும், நாம் காலங்கடந்தே ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். இந்நாட்களிலொன் றில் ஏதோ ஒன்று சம்பவிக்கப்போகின்றது, அது மிகவும் காலங்கடந்ததாய் இருக்கப் போகிறது. ஜனங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கூட அறியாமல் அவர்கள் மிருகத்தின் முத்தி ரையை தரித்துக் கொள்வார்கள். இயேசு, "குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் அவர்கள் இருவரும் குழியில் விழுவார் களே'' என்றார். நாம் நினைப்பதைக் காட்டிலும் நாம் காலங்கடந்தே ஜீவித்துக்
~~~~~

கொண்டிருக்கிறோம். அநேக உத்தமமான ஜனங்கள் என்ன செய்து கொண்டிருக்கி றார்கள் என்பதையுங் கூட அறியாமல் அவர்கள் அதை பின்பற்றுகிறார்கள்.

## 64-01-25 வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்

~~~~~

140. லூத்தரன்கள் கத்தோலிக்கர்களை பழித்துரைத்த காரணத்தால், அவர்களை பழித்துரைக்காதீர்கள். வெஸ்லி லூத்தரன் களை பழித்தரைத்த காரணத்தால் அவரை யும் பழித்துரைக்காதீர்கள். பாருங்கள், அந்த விதமாகவே, நீங்கள் இன்றைக்கு சம்பவித்துக் கொண்டிருக்கிற காரியத்தை பழித்துரைத்து அதிலிருந்து விலகிக் கொள்ளும் போது, நீங்கள் உங்களுடைய சபைகள் இந்த பெரிய உலக கிறிஸ்தவ ஐக்கிய சபை சங்கத்தின் அசைவுக்குள்ளாக செல்வதைக் காணும் போதும் இன்னும் மற்றவைகள் உங்கள் ஒவ்வொருவரையும்
~~~~~

மிருகத்தின் முத்திரைக்குள்ளாக வழி நடத்திச் செல்லும். நீங்கள் அதைப் பெற்றிருக்கிறீர்கள். அநேக உத்தம இருதயங் கொண்ட ஜனங்கள் நேராக அதற்குள்ளாக நடக்கின்றனர்.

**64-01-25 வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்**

~~~~~

250. நீங்கள் பெந்தெகொஸ்தேகாரன் ஒருவனை மெதோடிஸ்டு அல்லது பாப்டிஸ்டு உபதேசத்தினால் வஞ்சிக்க முடியாது என்று உங்களுக்கு நன்றாக தெரியும். அதை அவனிடம் எடுத்துக் கூறி அவனை உங்களால் வஞ்சிக்க முடியாது. அவனுக்கு அதைக் காட்டிலும் நன்றாகத் தெரியும். அவ்வாறே நீங்கள் ஒரு பாப்டிஸ்டை லூத்தரன் உபதேசத்தினால் வஞ்சிக்க முடியாது. பாருங்கள்? அது போன்று இந்த வார்த்தை செய்தியிலுள்ளவர்களை பொய்யான பெந்தெகொஸ்தே உபதேசமாகிய
~~~~~

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பதனாலும் இன்னும் அவர்கள் ஸ்தாபனங்களிலுள்ள மற்ற கோட்பாடுகளினாலும் வஞ்சிக்க முடியாது. முடியவே முடியாது! அவர்களை நீங்கள் வஞ்சிக்கவே முடியாது. ஏனெனில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்பட முடியாது.

251. அது என்ன? அது என்ன? வஞ்சிக்கப்படுதல். இந்த பொய்யான வெளிச்சங்கள் என்ன செய்கின்றன? கொல்லப்படுவதற்கென்று அவை சபைகளை உலக சபைகள் ஆலோசனை சங்கத்துக்குள் வழிநடத்துகின்றன. அதுவும் ரோம சபையும் ஒன்றாக இணையும் போது. அதுவே முடிவான கொல்லப்படுதலாயிருக்கும். அவர்கள் மிருகத்துக்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கும்போது, அதுவே முடிவான கொல்லப்படுதல். இப்பொழுது நீங்கள் பொய்யான வெளிச்சங்கள் என்ன

செய்கிறதென்பதை பாருங்கள். அது ஜனங்களை நடத்துகின்றது. அது ஒரு வெள்ளாடு.

252. வெள்ளாடு எப்பொழுதுமே செம்மறியாடுகளை கொல்லப்படுவதற்கு நடத்திச் செல்கின்றது. ஆடுகளைக் கொல் லும் இடங்களில் நீங்கள் அதைக் கண்டிருக் கிறீர்கள். வெள்ளாடு செம்மறியாடுகளை அதுவரைக்கும் நடத்திச் சென்று, அவை களை உள்ளே நுழைய விட்டு, அது குதித்து ஓடி விடும். பாருங்கள்? அது எப்பொழுதும் அப்படித்தான் செய்கிறது. ரோம வெள்ளாடுகள் இயேசுவாகிய ஆட்டுக்குட்டியை அடிக்கப்படும்படிக்கு நடத்தி சென்றன. அது உண்மை! இன் றைக்கு ஸ்தாபன வெள்ளாடுகள் பேதைக ளான செம்மறியாடுகளை அடிக்கப்படும் படிக்கு நடத்திச் செல்கின்றன. அவர்க ளுடைய பெயர்களை ஸ்தாபன புத்தகங்

களில் அவர்கள் எழுதின மாத்திரத்தில் அவர்கள் முடிந்து விடுகின்றனர். அது மிருகத்தின் முத்திரை. நான் கர்த்தருடைய நாமத்தினால் இதை உரைக்கிறேன். நான் நீண்ட காலமாக இக்கருத்தை உடையவனா யிருக்கிறேன். அது உண்மை. அது முற்றி லும் உண்மை. மிருகம் யார்? மிருகம் யார்? அது ரோம குருக்களாட்சி, முதல் ஸ்தாபனம். அதன் முத்திரை எது? அதே காரியம். அப்படியே! அது எப்படியோ அப்படியே. அடிக்கப்படுதல் ... பொய் யான வெளிச்சத்தினால்

253. ஆனால் தற்போதைய இருளின் மத்தியிலும் தேவனுடைய வெளிச்சம் பிரகாசிப்பதை நாம் கண்டோம். அதற்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக் கிறோம்!

## 63-12-29M விளக்கைப் போடக் கூடிய ஒரு மனிதன் இங்கிருக்கிறார்

~ ~ ~ ~ ~

ஞாபகம் கொள்ளுங்கள், நான் வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டுமென்று தேவன் என்னை எதிர்ப்பார்க்கிறார். நீங்கள் இந்த சபையில் வார்த்தையைக் கடைபிடிக்க வேண்டுமென்று நான் உங்களை எதிர்ப்பார்க்கிறேன், பாருங்கள், பாருங்கள். இதை ஆவிக்குரியதாக நீங்கள் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் கர்த்தரில் வளரத் தொடங்கும் போது, சாத்தானின் அந்தகார ராஜ்யத்தின் சக்திகள் உங்களுக்கு கெதிராக திருப்பி விடப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் பயிற்சி பெற்ற போர் வீரர்களாக இருக்க வேண்டும், புதிதாக சேர்ந்தவர்களாய் அல்ல. நீங்கள் இப்பொழுது அனுபவம் வாய்ந்த போர் வீரர்கள். சண்டையிட நீங்கள் பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். சாத்தான் உங்கள் நடுவில் வந்து, கூடு

மானால் ஒருவருக்கொருவர் சச்சரவை உண்டாக்க முனைவான். அவனை உடனே விரட்டுங்கள். நீங்கள் சகோதரர், அவனோ சத்துரு. உலகம் இருளடைந்து சபை இராஜ்யம் முழுவதுமே உலக சபைகளின் ஆலோசனை சங்கத்துக்குள் சென்று கொண் டிருக்கும் இந்த சாயங்கால வெளிச்ச நேரத்தில், நாம் ஒரு முன்மாதிரியாக இருக்கவே இங்குள்ளோம். வெகு விரை வில் அவர்கள் இந்த கதவின் மேல் ''மூடப்பட்டது'' என்று எழுதப்பட்டுள்ள அட்டையை தொங்க விடுவார்கள். அப்பொழுது நாம் வேறு இடங்களில் கூட வேண்டியதாயிருக்கும். ஏனெனில், நாம் மிருகத்தின் முத்திரையை தரிக்காமல் போனால், இந்நாட்களில் ஒன்றில் அவர் கள் நிச்சயமாக இந்த சபைகளை மூடி விடுவார்கள். மரணம் நம்மை விடுவிக்கும் வரைக்கும், நாம் தேவனுக்கு உண்மையாய்

நிலைத்திருந்து அவர் பேரில் சார்ந்திருக்கிறோம். அதைத் தான் நாம் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

**63-12-26 சபை ஒழுங்கு**

~~~~~

126. கத்தோலிக்க சபையும் பிராடெஸ்டெண்டு சபைகளும் நண்பர்களாகிவிடுவர். நான் உங்களிடம் கூறியிருக்கிறேன், அவர்கள் எல்லோரும் .... அன்று முதல் ..... அவர்கள் ஒன்றாக இணைந்து விடுவார்கள் என்று கடந்த முப்பது ஆண்டுகளாக நான் கூறி வருகிறேன். அவர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பாருங்கள். பிராடெஸ்டெண்டுகள் கத்தோலிக்கர்களாக மாறமாட்டார்கள், ஆனால் அவர்கள் சகோதரத்துவத்தில் ஈடுபட்டிருப்பார்கள்; மிருகத்தின் முத்திரை; மிருகத்திற்கு ஒப்பானது.
~~~~~

## 63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

~~~~~

123. நான் ஏன் ஸ்தாபன மார்க்கத்துக்கு விரோதமாயுள்ளேன் என்பதை இப்பொழுது உங்களால் காண முடியும், ஏனெனில் அது மிருகத்தின் முத்திரை. ரோமாபுரிதான் அதற்குத் தலை, அது முதலாம் ஸ்தாபனம். அது முற்றிலும் உண்மை. குமாரத்திகளை - அதன் சொரூபத்தை - சேர்ந்து கொள்வதன் மூலம் எல்லோரும் அந்த முத்திரையைத் தரித்துக் கொள்ளும்படி செய்கிறது. தாயும் அதைத்தான் செய்தாள். ரோம மார்க்கம் எங்கு முதலில் ஸ்தாபிக்கப்பட்டது? உலகிலேயே முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கம் எது? ரோமன் கத்தோலிக்க மார்க்கம்! அது உண்மையல்ல என்னும் கருத்தை யாராகிலும் கொண்டிருந்தால், அதை நான் கேட்க விரும்புகிறேன்.
~~~~~

அப்படி யாரும் இங்கில்லை. முதலாம் ஸ்தாபனம், முதலாம் சபை, ரோமாபுரியி லிருந்த நிசாயாவில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆம், ஐயா. அதைத்தான் அவர்கள் செய்தனர்.

**63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?**

~~~~~

119. நான் ஏன் அந்த விதமான வர்ணம் தீட்டுதலுக்கு எப்பொழுதும் விரோதமாயிருந்தேன்? எனக்கு முன்பு தெரிந்திருக்கவில்லை, இப்பொழுது எனக்குத் தெரியும். நான் ஏன் ஸ்தாபிக் கப்பட்ட மார்க்கத்துக்கு எப்பொழுதும் விரோதமாய் இருந்து வந்தேன் .... காரணம் இப்பொழுது எனக்குத் தெரிகிறது. அது மிருகத்தின் முத்திரை. பாருங்கள்? இரண்டு வாரங்கள் முன்பு வரைக்கும் நான் அவ்வாறு கூறவில்லை.
~~~~~

## 63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

~~~~~

114. பார்த்தீர்களா? அந்த நேரத்தை தான் நாம் அடைந்துள்ளோம். ஒரு பெரிய இயந்திரம் உருவாக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது. அவர்களிடம் இயங்கும் முறை உள்ளது. அவர்கள் பெற வேண்டிய ஒன்றே ஒன்று, சாத்தான் தன் வல்லமையுடன் வந்து அதை இயக்கி, மிருகத்தின் முத்திரையை வலுக்கட்டாயமாக அளிப்பதே. அது வலுக்கட்டாயமாக அளிக்கப்படும் போது, இயக்கும் சக்தி கிரியை செய்கிறது. இயங்கும் முறை அங்குள்ளது. அவர்கள் ஏற்கனவே அதை பெற்றுள்ளனர்.

## 63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

~~~~~

102. அதுதான் மிருகத்தின் முத்திரைக்கும் தேவனுடைய முத்திரைக்கும் வித்தியாசம். தேவன் தமது வார்த்தையினால் முத்தரிக்கிறார். வார்த்தைதான் முத்திரை என்று நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? (சபையார் 'ஆமென்'' என்கின்றனர் - ஆசி) நீங்கள், "சகோ.பிரன்ஹாமே, அது உண் மையா?'' என்று கேட்கலாம். ஆம், ஐயா!

103. இப்பொழுது, ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர் ஓய்வு நாள் ஆசரிப்பு தான் முத்திரை என்று கூறுகின்றனர் என்று எனக்குத் தெரியும். உங்களிடம் நாணய மற்ற விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்றல்ல, ஆனால் அது வேத ஆதார மற்றது

எபேசியர் 4:30 என்ன கூறுகிறதென் றால், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாய் பெற்ற தேவனுடைய

பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (பாருங்கள்?)

104. பரிசுத்த ஆவி என்பது வார்த்தை . தேவன் மூவர் அல்ல. அது ஒரே தேவன் மூன்று யுகங்களில், மூன்று பதவிகளில். தேவனாகிய பிதா, நியாயப்பிரமாணத்தின் காலத்தில்; தேவனாகிய குமாரன், கிருபையின் காலத்தில்; தேவனாகிய பரிசுத்த ஆவி (நீங்கள் அழைப்பது போன்று) - அதே தேவன் பரிசுத்த ஆவியின் யுகத்தில். தேவனாகிய பிதா வார்த்தையாயிருந்தார்; தேவனாகிய குமாரன் வார்த்தையாயிருந்தார், தேவனாகிய பரிசுத்த ஆவி வார்த்தையாயிருக்கிறார். பாருங்கள், அது மூன்று உத்தியோகங்கள். நீங்கள் வார்த்தையை ஏற்றுக் கொண்ட பிறகு, பரிசுத்த ஆவி உங்களை முத்தரிக்கிறது. எனவே நீங்கள் வார்த்தையினால் முத்தரிக்கப் படுகிறீர்கள்.

105. நீங்கள், ''நான் வார்த்தையினால் முத்தரிக்கப்பட்டிருக்கிறேன்' எனலாம். அப்படியானால், அது தன்னை அடையாளம் காண்பிக்கும். பாருங்கள்? அது நிரூபிக்கும் நீங்கள் ஒரு ஸ்தாபன முறைமையைச் சார்ந்திருந்து, ஒரே நேரத்தில் ஸ்தாபன முறைமையினாலும் வார்த்தையினாலும் முத்தரிக்கப்பட முடியாது. பாருங்கள்? ஏனெனில் அது ஒன்றுக்கொன்று முரணானது. அப்படி நீங்கள் செய்ய முடியாது. சரி.

**63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?**

~~~~~

100. அது என்ன? அது ஒரு முறைமையாயிருக்க வேண்டும். பாருங்கள்? சற்று யோசித்து பாருங்கள்: அந்த முறைமையிலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் நீங்கள் சேர்ந்திருந்தால், என்ன செய்கிறீர்கள்?
~~~~~

நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்? நீங்கள் வார்த்தையை விட்டு விலகி (பாருங்கள்?), ஒரு கொலைபாதக முறைமையில் முத்தரிக் கப்பட்டு விட்டீர்கள். அது எதை எடுத்துப் போடுகிறதென்றால் ... அது தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு, அதன் பெலனை மறுதலிக்கிறது. அது மிருகத்தின் முத்திரை. முற்றிலுமாக

**63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?**

~ ~ ~ ~ ~

இவையனைத்துக்கும் பிறகும், அவர்க ளுடைய முறைமைகள் சத்தியத்தைப் புறக்கணித்து, சபைகளின் ஆலோசனை சங்கத்தை விரும்புகின்றன. எல்லாவற் றையும் மூடி, அவைகளை நிறுத்தி, அவை களை விற்றுப்போடும் ஒரு கொலைபாத கனை அவை விரும்புகின்றன. அது அதை நிச்சயம் செய்யும். அவர்கள் அவைகளை

நிறுத்தி விடுவார்கள். சபைகளின் ஆலோசனை சங்கம் அப்படி செய்ய வேண்டும். அதோ மிருகத்தின் முத்திரை! அந்திக் கிறிஸ்து - கிறிஸ்துவாகிய வார்த்தைக்கு எதிரானது. அவர்களுடையது அல்ல.... அவர்கள் நினைக்கின்றனர்,

**63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?**

~~~~~

லோத்து தன் கடைசி அழைப்பை விடுத்தான், அதாவது தூதன் அதை செய்தார் - செய்தியாளன், அது யாராயிருப்பினும், தேவன் அந்நாளில் பிரதிநிதியாகத் தோன்றினார். தேவன் மாம்சத்தில் பிரதிநிதியாகத் தோன்றி, தமது கடைசி அடையாளத்தைக் காண்பித்து, தமது கடைசி வேலையைச் செய்தார். அதன் பின்பு எல்லாமே முடிந்துவிட்டது.
~~~~~

நோவா தன் கடைசி பிரசங்கத்தை செய்தான். அவன் உள்ளே சென்றவுடன் கதவு அடைக்கப்பட்டது. அவ்வளவுதான். அவர்கள் அதைப் பார்த்து நகைத்தார்கள், கேலி செய்தார்கள். யோசித்துப் பாருங்கள். ஜனங்கள் பிரசங்கித்துக் கொண்டே செல்ல முடியும். உலக சபைகள் ஆலோசனை சங்கம், அவர்கள் வாக்குரைத்தபடியே, கத்தோலிக்க சபையுடன் சேர்ந்து கொள்ள முடியும். எல்லா ஸ்தாபனங்களும் அதற்குள் வரக்கூடும். ஆனால் மிருகத்தின் முத்திரை ஏற்கனவே அங்குள்ளது. அதை அவர்கள் தரித்துக் கொண்டுவிட்டனர். அவர்கள் ஓ, "அல்லேலூயா தேவன் ஸ்தோத்தரிக்கப்படுவாராக. கடந்த இரவு அநேகர் இரட்சிக்கப்பட்டனர்" என்கின் றனர். அப்படியா?

''அவர்கள் ஆவியில் நடனமாடினார்கள், அந்நிய பாஷை பேசினார்கள்'' அதனால் ஒன்றுமேயில்லை.

## 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்

~ ~ ~ ~ ~

அண்மையில் நான் பிரசங்கித்த "யேசபேல் மார்க்கம்'' என்னும் செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அன்று காலை எலியா அவர்களிடம் கூறுவதற்காக சாலையின் வழியாக நடந்து வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும்... அதைக் குறித்து நான் பிரசங்கித்தேன். அப்பொழுது நான், இந்த உலகசபைகள் ஆலோசனை சங்கம் முடிவில் மிருகத்தின் முத்திரையாக ஆகிவிடும், ஏனெனில் அது மிருகத்துடன் இணைந்துவிடும் என்று முன்னறிவித்தேன். அது இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. என் காலத்தில் அதைக் காண

நான் உயிர் வாழ்ந்துவிட்டேன். இலட்சக் கணக்கான பிராடெஸ்டெண்டுகள் அதனால் கவர்ச்சிக்கப்படுவதை நீங்கள் கேள்விப்படுகின்றீர்கள். ஏன்? அதைத்தான் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் குருடராயிருக்கின்றனர்.

இயேசு அந்த பரிசேயர்களை நோக்கி, ''குருடருக்கு வழி காட்டும் குருடர்களே" என்று கூறினார். ''குருடன் குருடனுக்கு வழி காட்டினால், அவர்கள் எல்லோருமே குழியில் விழுவார்களே'' என்றார் அவர். அங்குதான் அவர்கள் விழுந்து போகின் றனர். என்னுடன் நின்று, என்னுடன் பேசின மனிதன் அப்படிப்பட்ட வாக்கு மூலத்தை அளித்தார் என்பதை என்னால் எப்படி நம்ப முடியும்? அது அவர்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது - அது ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டு, கற்றுக் கொள்ள விருப்ப

முள்ள பாலகருக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

**63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

~~~~~

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிராதவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளும்படி அவன் செய்தான் என்று வேதம் கூறுகின்றது. முன்குறிக்கப்பட்ட சபைக்கு நான் பேசிக் கொண்டிருக்கிறேன் - வெளியிலிருப்பவர்களுக்கு அல்ல. இல்லை, ஐயா. ஒவ்வொரு கூட்டத்தாரிலிருந்தும், தமது முன்குறிக்கப்பட்டவர்களை அவர் வெளியே இழுத்து விடுகிறார். அவர்களுக்காகத்தான் அவர் ஒவ்வொரு காலத்திலும் வருகிறார்.
~~~~~

~~~~~

உலக சபைகளின் ஆலோசனை சங்கம் இப்பொழுது ரோமாபுரியில் கூடுகின்றது... என் அருமை நண்பர் டேவிட் டியூப்ள ஸிஸ் அனுப்பிய இந்த பொதுவான கடிதம் (circular letter) அண்மையில் நான் போர் டின் மைல் கிரிக் (Fourteen mile creek) என்னுமிடத்தில் உட்கார்ந்து கொண்டு அவரிடம் இதைக் குறித்து கதறினேன். அவர் சபையை பாபிலோனுக்குள் திருப்பிக் கொண்டிருக்கிறார் என்று அவர் உணரவில்லை. எல்லோருமே, "ஓ, எல்லா சபைகளுமே இப்பொழுது ஒன்றாகப் போகின்றன" என்கின்றனர்.

ஆம், அது எனக்குத் தெரியும். 1933-ம் ஆண்டில் என் தீர்க்கதரிசன புத்தகத்தில் எழுதப்பட்ட விதமாகவே, அது சம்பவிக் கும். சாத்தான் ஒன்றாக இணைக்கிறான் என்பதை ஏன் நீங்கள் உணருவதில்லை?
~~~~~

வேதாகமம் அதை கூறுகின்றது. சிறிது காலத்திற்குப் பின்பு, அவர்கள் ஒன்றாக ஆனவுடன், ஸ்தாபனங்களுக்கிடையே உள்ள பாகுபாடு முடிவடைந்துவிடும். அங்கே உங்கள் மிருகத்தின் முத்திரை இருக்கும். உண்மை.

**63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

~~~~~
~~~~~